செ.வெ.எண் :08/ஜனவரி நாள் : 04.01.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாற்றுத்திறனாளிகளுக்கான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் பணி ஆணைகளை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டரங்கில் இன்று (04.01.2019) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் ஒருங்கிணைந்து நடத்திய மாற்றுத்திறனாளிகளுக்கான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, பணிக்கு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, பராமரிப்பு உதவித் தொகை, பேருந்து பயண சலுகை அட்டை, உதவி உபகரணங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாவட்டத்தில் மொத்தம் 28,700 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 4,345 நபர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.1,500/- பெற்று பயனடைந்து வருகின்றனர்.

அந்த வகையில், இராமநாதபுரம் மாவட்டத்தில், மாற்றுத்திறனாளிகளின் தன்னம்பிக்கையினை ஊக்குவிக்கும் வகையில் அவரவர் திறமைக்கேற்ப வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுகின்றது. இம்முகாமில், இராமநாதபுரத்திலுள்ள கோல்டன் ஷாப்பிங் மால், இலாஹி ஷாப்பிங் மால், மஹாராஜா சில்க்ஸ், Youth for Jobs என்ற தொழில் திறன் பயிற்சி நிறுவனம் உள்ளிட்ட 4 தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது நிறுவனங்களுக்கு தேவையான நபர்களை பணிக்கு தேர்வு செய்கின்றனர். இம்முகாமில், 80 மாற்றுத்திறன் கொண்ட நபர்கள் ஆர்வமுடன் பங்கேற்றுள்ளனர்.

இதுதவிர, மாற்றுத்திறனாளிகள் சுய தொழில் துவங்குவதற்கு அரசு மானியத்துடன் கடனுதவி வழங்குவதற்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, மாவட்ட தொழில் மையத்தின் மூலம் புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரையிலான அரசு மானியத்துடன் ரூ.5 கோடி வரையில் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக சுயமாக சிறு தொழில் துவங்குவதற்கு ரூ.25,000 அரசு மானியத்துடன் அதிகபட்சமாக ரூ.75,000 வரையில் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. இதுதவிர, முத்ரா கடனுதவி திட்டத்தின் கீழ் சிறுதொழில் துவங்குவதற்கு பிணையமில்லாமல் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய திட்டங்களை பயனாளிகள் பயன்படுத்திக் கொண்டு சுயமாக தொழில் துவங்கலாம். தற்போதைய சூழ்நிலையில் தமிழ்நாடு அரசு ஒரு முறை பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்துள்ளது. இத்தகைய பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான பொருட்களின் தேவை அதிகரித்துள்ளது. அதன்படி, பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றான எளிதில் மக்கக்கூடிய பொருட்களை தயாரிக்கும் நிறுவனம் துவங்கலாம். இதுதவிர, உணவு பதப்படுத்துதல், கைப்பேசி பழுது நீக்கம் செய்தல், தையலகம் அமைத்தல், கைவினை பொருட்கள் தயாரித்தல், போன்ற பல்வேறு விதமான தொழில் வாய்ப்புகள் உள்ளன. மாற்றுத்திறனாளிகள் இத்தகைய வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சி.தங்கவேல், மாவட்ட உதவி வேலைவாய்ப்பு அலுவலர் திரு.என்.எம்.சீனிவாசன் உட்பட அரசு அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**